தமிழ் வாழ்க

# தமிழ்ப் பொழில்

துணர்: ௫௫ மலர்: ௰

திருவள்ளுவர் யாண்டு ௨௰௧௩
துன்மதி : தை
(1982 சனவரி–பிப்ரவரி)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

பொழிற்றொண்டர் :
திரு அரங்க வே. சுப்பிரமணியன், பி. ஏ.,

# தமிழ்ப் பொழில்

துணர் : ருரு உள்ளுறை மலர் : ம

—o—

பக்கம்

1 வேண்டுகோள் .... 219
த. வே. உ. நா. விழாக்குழு

2 பாட பேதங்கள் ஒரு கண்ணோட்டம் .... 221
அ. ம. சத்தியமூர்த்தி,
எம். ஏ; எம். ஃபில்;
இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

3 பாரதியும் பாரதிதாசனும் .... 228
இராம. சுப்பிரமணியன்,
எம். ஏ; எம். இலைப். சைன்சு; பி. எல்;
சென்னை-5.

4 கீழ்க் கணக்கில் சில-புதிய
தொழிற்பெயர் வடிவங்கள் .... 235
முனைவர் ஆதித்தன்
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்

5 வீரசைவம் - ஓர் மேல்நோக்கு .... 237
"அறிவன்"
மா. சற்குணம், எம். ஏ;
துணைப் பேராசிரியர்,
சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்.

—✱—

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௫௩ | திருவள்ளுவர் யாண்டு உ௰௧௩<br>துன்மதி—தை<br>1982 சனவரி—பிப்ரவரி | மலர் ௰ |
|---|---|---|

தமிழ் வாழ்க

## தமிழவேள்
# த. வே. உமாமகேசுவரனார்
# நூற்றாண்டு விழா
## —: வேண்டுகோள் :—

தண்டமிழ்ச் சான்றீர்!

வணக்கம். முத்தமிழ் வளர்த்த பாண்டி மன்னரின் பின், முச் சங்கத்தின் தொடர்பாக, நான்காம் சங்கத்தைத் தோற்றுவித்துப் பைந்தமிழ்ச் சிறப்பினையும் பழந்தமிழ் நூல்களையும் உலகுக்கு அறிவித்த பாண்டி மன்னர் வழிவந்த பெருமகன் பாண்டித் துரைத் தேவர் அவர்கள், மதுரையில் தமிழ்ச்சங்கத்தை நிறுவி னார்கள். அந்நிலையில், இமயம் வென்ற கரிகாலன் வழிவந்த சோழர்கள் ஆண்ட பொன்னிக்கரையில் மன்னிய தமிழ்ச்சங்கம் நிறுவி வளர்க்கப் பேரரசரோ—சிற்றரசர்களோ முன்வராத நிலை யில், தமிழ்ச் சான்றோர் மரபில் வந்த நம் 'செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள்' அவர்கள் கன்னித்தமிழின் பெருமையை — தனித் தமிழின் செம்மையை உலகறியப் பரப்பவேண்டி, உற்ற நண்பர்களோடு 'கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தார். பாண்டித்துரைத் தேவரும் பைந்தமிழ்ச் சான்றோரும் பாராட்டப் பணிபுரிந்த 'தமிழவேள்' தலைமை தாங்கி நடத்திய 'கரந்தைத் தமிழ்ச்சங்கம் இன்றளவும் முத்தமிழ்ப் பணிபுரிந்து வருகின்றது. தமிழுக்கு ஊறு வரும்போதெல்லாம் தானைத்தலைவனாய் முன் னின்று தமிழர்க்கு வழிகாட்டிய தமிழவேள் த. வே. உமாமகேசு வரனார் தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் காண' அற்றை நாளிலேயே திட்டம் தீட்டிய பெருமகனார். அவர் கனவு இன்று நனவாகியுள்ளது. இவர் முத்தமிழும் இயற்கையோடு வளர—வழி காண, 'தாகூர்' தோற்றுவித்த ''விசுவ பாரதி''யைப் பார்த்து

அதனினும் சிறந்த பல்கலைக் கழகமாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை ஆக்க எண்ணி அருந்தொண்டு புரிந்த பெருமகனார். அவர்தம் தொண்டின் நோக்கம் நிலத்தினும் பெரிது! வானினும் உயர்ந்தது! அவ்வளவிற்கு இன்றைய, சங்கம் வளரவும் வளர்க்கவும் முயற்சி கொண்டுள்ளது,

தமிழவேள் அவர்களின் நல்லெண்ணம் காரணமாக இன்றைக்கு நில்வும் கரந்தைப் புலவர் கல்லூரி, உமாமகேசுவர மேல்நிலைப் பள்ளி, இராதாகிருட்டின தொடக்கப்பள்ளி, மழலையர் பள்ளி, ஏழை மாணவர் இல்லம், அரும்பெரும் நூலகம் யாவும் தமிழ் வளர்ச்சிக்குச் சான்றாக நிற்கின்றன. அவர்தம் பெருங்கனவை நனவாக்க, அவரை இடைவிடாது எண்ணுதலும் அவரைப் போற்றுதலும் தமிழறிந்த — தமிழால் வளர்ந்த — தமிழால் வாழும் அத்துணைப் பேருக்கும் கடமையாகும். அவ்வெண்ணத்தைப் புதுப்பிப்பதற்காகத் 'தமிழவேள் அவர்களின் நூற்றாண்டு' 1983-ஆம் ஆண்டு மே திங்கள் 7-ஆம் நாளில் வருகின்றது. அந்நிறைவினைத் தமிழகம் அளாவிய ஒரு விழாவாகக் கொண்டாடுதற்குச் சங்கத் தொண்டர்களாகிய நாங்கள் முன்னிற்கின்றோம். அந்நிறைவு விழா, களிப்பூட்டும் உவகை விழாவாக மட்டுமல்லாமல் நினைவும் பொழுதும் உள்ளவரை நினைவுகூரத்தக்க வகையில் தமிழவேள் அவர்களின் பெயரால் ஒரு பெரும் கலைக்கூடமும் — அருங்கலை நூலகமும் — தமிழ் ஆராய்ச்சிப் பரிசு நிதியும் — நினைவு மலரும் படைக்க எண்ணுகிறோம். எங்கள் பணிக்குத் தமிழகத்தில் வாழும் அத்துணைப் பெருமக்களும் ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்பும் தர வேண்டுகிறோம். இதற்காகும் செலவு நிதி 'ஐந்து இலட்சமாகும்' என்று விழாக்குழு கணித்துள்ளார்கள்.

இத்தொகை முதற்கண் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்தவர்கள்-அதிலே பயின்றவர்கள் வாயிலாக வருவது கடப்பாடாகும். தஞ்சைமாநகர்-தஞ்சை மாவட்டத்து மக்களால் வருவது பொறுப்பானதாகும். தமிழ்கப் பெருமக்களால் வருவது சிறப்பானதாகும் என்று கருதுகிறோம்.

பொருள் வழங்குவோர்:

**பொருளாளர்,**
தமிழவேள் த. வே. உ. நூற்றாண்டு விழாக்குழு,
கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
**கரந்தை, தஞ்சாவூர்-2.**

என்ற முகவரிக்கு அனுப்பியருள வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
**நூற்றாண்டு விழாக்குழுவினர்**

# பாட பேதங்கள் — ஒரு கண்ணோட்டம்

—அ. ம. சத்தியமூர்த்தி,
எம். ஏ; எம். ஃபில்;

முன்னுரை:

தமிழ்ச் சுவடிகளின் பதிப்பு வரலாற்றில் பாடபேத ஆராய்ச்சி கருதப்பட வேண்டிய ஒன்றாக அமைகிறது. பாட பேத ஆராய்ச்சியின் வரலாறு, பாடபேதம் பற்றிய விளக்கம், அது ஏற்படக் காரணம், மூலபாடத்தைக் கண்டறிதல், பதிப்புக் கலைக்கும் பாடபேதத்திற்குமுள்ள தொடர்பு முதலியவற்றை அறிவதன் மூலம் பதிப்புக்கலையின் வளர்ச்சிக்கு வழி ஏற்படும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

பாடபேத ஆராய்ச்சியின் வரலாறு:

தமிழில் பதிப்புக்கலை சிறப்புற்றிருந்தபோதும், பாடபேத ஆராய்ச்சி வளர்ந்த நிலையில் இருந்தபோதும், பாடபேதம் குறித்துத் தனிப்பெரும் நூல்கள் அவ்வளவாகத் தோன்றவில்லை என்றுதான் கூற வேண்டியுள்ளது. பதிப்பு நூல்களின் முன்னுரைப் பகுதிகளில் மூலபாட ஆய்வு குறித்த செய்திகள் சில காணப்படுகின்றன. பேராசியர் எசு. வையாபுரிப்பிள்ளையின் 'கம்பன் காவியம்' எனும் நூல் மூலபாட ஆய்வு குறித்துச் சற்று விளக்கமாகவே பேசுகிறது. மூலபாட ஆய்வு பற்றிய கட்டுரைகள் சில இதழ்களில் அவ்வப்போது வெளிவந்துள்ளன. 'பிரதிபேத ஆராய்ச்சி' எனும் நூலை திரு மு. இராமகிருட்டினன் முதலாவதாக எழுதினார். முதல் முயற்சியாகையால் இதன்கண் பிழைகள் சிலவும் காணப்படுகின்றன. அஃதாவது பிரதி பேதத்திற்கும் பிழைக்கும் உள்ள வேறுபாட்டை இவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இது குறித்த விளக்கத்தைப் பின்னர் காணவிருக்கிறோம். அடுத்து வித்துவான் மு. சண்முகம்பிள்ளையின் 'திருக்குறள் யாப்பமைதியும் பாட வேறுபாடும்' எனும் நூல் பாடபேதம் நேர்ந்த வகையைப் பொதுக் கருத்தாகத் தருகிறது. புலமை இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் இரண்டுடன் மேலும் ஒரு கட்டுரையை இணைத்து 'மூலபாட ஆய்வியல்' என்னும் ஒரு முழு நூலாகத் திரு அ. விநாயகமூர்த்தி வெளியிட்டார். இவ்வளவில் பாடபேதம் குறித்த ஆய்வுகள் அமைகின்றன.

பாடபேதம் — விளக்கம்:

மூல நூலாசிரியரின் கருத்து இதுவா அல்லது அதுவா என்று நாம் முடிவு செய்ய இயலாத அளவில் இரண்டோ அதற்கு மேற்பட்ட

பாடமோ அமைவது பாட பேதமாகும். மூல பாடத்தை அறிவது கடினமாயினும் முழு நூலையும் அதன் அகப்புறச் சான்றுகளையும் நோக்குமிடத்துப் பெரும்பாலும் மூலபாடத்தைக் கண்டறியவும் இயலும். பாட வேறுபாடானது பாடலின் கருத்தை மாற்றுவதாகவும், பொருளோட்டத்தைத் திருப்புவதாகவும் அமையும்.

ஆயினும் பாடவேறுபாடு என்பதற்கு விளக்கம் கூறவந்த திரு மு. சண்முகம் பிள்ளை 'பாடவேறுபாடு என்பது ஒரு சொல்லுக்கு மாறாக அதே ஓசையையுடைய வேற்றுச் சொல் அல்லது அதே பொருளுடைய பிறிதொரு சொல் வந்து வழங்குவதாகும்'[1] என்று விளக்கம் கூறுவார்.

இவண் பாடபேதம், வடிவ மாறுபாடு, பிழை, இடைச்செருகல் ஆகியவற்றுக்கிடையே காணப்படும் வேறுபாட்டையும் நாம் உணர வேண்டியது இன்றியமையாதது. சிலர் இவற்றை ஒன்றாக எண்ணிக் குழம்பவும் செய்கின்றனர். அஃதாவது, பாடபேதம் என்பது பொருள் மாறுபாட்டிற்கு வழியமைப்பது. வடிவ வேறுபாடு என்பது படிப்போர் அல்லது படியெடுப்போரால் உணரக் கூடியது. பிழை என்பது இலக்கண இலக்கியப் பயிற்சியின்மையால் நேர்வது. இடைச்செருகல் என்பது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்படுவது. எனவே, இவை ஒன்றற்கொன்று ஓரளவு தொடர்புடையவையாயினும் முற்றிலும் ஒன்றுபட்டவை அல்ல.

பாடபேதம் ஏற்படக் காரணங்கள்:

1 பழங்காலத்தில் நூல்களைப் படியெடுக்குமிடத்து ஒருவர் கூறக்கேட்டுப் பிறர் படியெடுப்பதும், தாமே பார்த்துப் படியெடுப்பதுமாகிய இரு வழக்கங்கள் இருந்திருக்கின்றன ஒருவர் கூறக்கேட்டு எழுதுமிடத்து ஒலி ஒப்புமையுடைய எழுத்துக்களைத் தவறாக எழுதி விடுவது உண்டு. இதற்குச் சான்றாகத் திருக்குறளில் (280) வரும் 'மழித்தலும்' — 'வழித்தலும்' எனும் பகுதியைக் காட்டலாம்.

2 தாமே பார்த்து எழுதுமிடத்து உருவ ஒப்புமையுடைய எழுத்துக்களைத் தவறாக எழுதிவிடுவதாலும் பிரதிபேதம் நேரும். இவ்வுருவ ஒப்புமை க - ச - த, த - ந, கு-டு-று, த-ந, ப-ம-ய, ல-வ, மு-மு ஆகிய எழுத்துக்களுக்கிடையேயும் இவை போன்ற பிற உருவ ஒப்புமையுடைய எழுத்துக்களுக் கிடையேயும் பாடபேதம் ஏற்பட வாய்ப்பாக அமைகிறது.

3 படியெடுக்குமிடத்து தாம் படித்த ஒத்த சொற்கள் நினைவிற்கு வர, அவற்றையும் இடைமடுத்து விடுவதால் பிரதி பேதங்கள் ஏற்படும்.

4 விரைவாகப் படியெடுக்குமிடத்தும் பிரதிபேதங்கள் நேர வாய்ப்புண்டு.

5 படிப்போர் அல்லது படியெடுப்போர்தம் பார்வைக் கோளாறு, கண் அயர்வு, உடற் சோர்வு முதலான காரணங்களாலும் பாடபேதம் ஏற்படும்.

6 வேறு நினைவு குறுக்கிடுவதால் சொற்களை விடுத்தலும், சேர்த்தலும், மாற்றலும் நிகழ்தல் உண்டு. இதனால் ஏற்படும் பிரதி பேதங்களும் உண்டு.

7 சில நேரங்களில் இட நெருக்கடி காரணமாக எழுத்துகளையும், சொற்களையும் சேர்த்தெழுத வேண்டிய நிலையும் ஏற்படும். இதனாலும் பிரதிபேதங்கள் ஏற்படுகின்றன.

8 சிலருடைய கையெழுத்தின் மாறுபாட்டின் காரணமாகவும் பிரதிபேதங்கள் ஏற்படுவதுண்டு.

9 கவனக் குறைவால் நேரும் பிரதிபேதமும் உண்டு.

10 படிப்பவர்தம் விருப்பு வெறுப்புக்கு ஏற்பவும் பிரதிபேதம் ஏற்படுவதுண்டு. புறநானூறு 34-ஆம் பாடலினுள் ‘பார்ப்பார்’ என்பது ஒரு பாடமாகவும் ‘குரவர்’ என்பது மற்றொரு பாடமாகவும் அமைந்துள்ள பகுதியினை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

11 படிப்போரின் மனநிலையின் காரணமாகவே பொருளொப்புமைப் பிரதிபேதங்களும் தோன்றின.
உலகத்தார்க்கு — உலகத்திற்கு (குறள்: 1032)

12 சில சொற்கள் படியெடுப்பவர் வாழும் பகுதியின் பழக்க வழக்கத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப பிரதி பேதங்களாக அமைவதும் உண்டு.

13 ஏட்டைப் படிக்குமிடத்துத் தவறாகப் பாடங் கொள்வதாலும் பிரதிபேதம் ஏற்படுகிறது. சேலம் என்பது ‘செலம’ என்றே காணப்படும். இதை செலம் செலம, செலம், சேலம் எனப் பல்வேறு வகையில் படிக்க வாய்ப்பேற்படுகிறது.

இக்கருத்தை விளக்க வந்த பேராசிரியர் எசு. வையாபுரிப் பிள்ளை ஏடுகளை வாசிக்குமிடத்து மிகச் சிறந்த பண்டிதர்கள்கூட பிழை போதற்கு இடம் உண்டு என்று கூறுவார். மேலும் இவர்

நண்டிற்குக் 'களவன்' என்பது ஒரு பெயராம் என்றும், இதற்கு வயற்களத்திலே வாழும் உயிர் என்பது பொருள் என்றும், அதனைக் 'கள்வன்' என்று நெடுங்காலமாய் படித்து அச்சியற்றி வெளியிட்டவர்கள் மிகச் சிறந்த வித்வான்களாவர் என்றும் குறிப்பிடுகிறார்.[2]

14 **சி**ல இடங்களில் பிழையாக வாசித்து, செய்யுளோசை குறைவுபடுதல் நோக்கி அடைமொழி முதலியவற்றைப் பெய்து நிரப்பியுள்ளனர்.[3]

15 **ப**ழங்காலத்தில் காவியங்களைப் பிரசங்கம் செய்யும் முறையிலேயே அமைத்தனர். அவ்வாறு பிரசங்கம் செய்தவர் தகுந்த சொல்லுணர்ச்சி அற்றவராகவும் இருந்தனர். எனவே தாம் மறந்த சில சொல்லுக்குப் பதிலாக வேறு சொல்லை இட்டும் நிரப்பியுள்ளனர் என்று கூறிப் பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை 'கம்பன் காவியம்' எனும் நூலில் சான்று காட்டி விளக்கியுள்ளார்.

16 **வி**ரைவு கருதியும், ஓலை கிழிந்துவிடும் என்ற காரணத்தாலும் மெய்யெழுத்திற்குப் புள்ளியிடாமல் எழுதியதால் ஏற்பட்ட பிரதிபேதங்கள்தாம் அதிகம்.

17 **கூ**டினமான, பொருள் எளிதில் உணரவியலாத சொற்களிலும் பாடவேறுபாடுகள் தோன்ற வாய்ப்புண்டு.

18 **ம**ரியாதையின் காரணமாக 'ஆர்' விகுதியிட்டு வழங்குதலால் நேரும் பாடபேதங்களும் உண்டு. சான்றாக 'நக்கீரர்' — 'நக்கீரனார்', 'வெள்ளிவீதி' — 'வெள்ளிவீதியார்' என்பன போன்று வருமிடங்களைச் சங்க இலக்கியத்திலிருந்து காட்டலாம்.

19 **பு**ணர்ச்சி விதியானது பின்பற்றப்பட்டும், விதி பின்பற்றப்படாமல் அப்படியே எழுதியமையாலும் ஏற்பட்ட பிரதிபேதங்களும் உண்டு.

'அரிசில் கிழார்' — 'அரிசிற் கிழார்' என இருவேறு பாடம் அமைந்ததைக் குறுந்தொகை 193-ஆம் பாடலாசிரியர் பற்றிய குறிப்பில் காணலாம்.

^ **எ**ழுத்துக்கள் மிகுந்தும் குறைந்தும் பிரதிபேதங்கள் நேர்ந்துள்ளன. 'கருவூர்க் கதப்பிள்ளை' — 'கருவூர்க் கந்தப்பிள்ளை' என்பதனை மிகுதற்கும், 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' — 'பாலை பாடிய பெருங்கோ' என்பதனைக் குறைதற்கும் சான்றாகக் காட்டலாம்.

இவ்வாறு பிரதிபேதங்கள் ஏற்படுவதற்கான காரணங்களாகப் பல வற்றைக் காட்டலாம்.

மூலபாடங்களைக் கண்டறிதல்:

இரண்டோ அதற்கு மேற்பட்ட பாடங்களோ கிடைக்குமிடத்து மூலநூலாசிரியர் இயற்றிய பாடம் எஃது என ஆய்ந்து முடிவுக்கு வருவதே மூலபாட ஆய்வாகும். மூலபாட ஆய்வு செய்வோருக்குப் பரந்துபட்ட இலக்கிய அறிவு தேவை சிறப்பாக யாப்பு, புணர்ச்சி பற்றிய இலக்கண அறிவு மிகவும் இன்றியமையாதது.

மூலபாடத்தைக் காணும்போது சில நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. முதலாவதாக மூலநூல் தொடர்பான அச்சுப் பிரதிகள், ஏட்டுப்பிரதிகள் ஆகியவற்றைத் தொகுக்க வேண்டும். பிறகு அவைகளை இடவாரியாகப் பிரிக்க வேண்டும். அடுத்து இடவாரியாக — பிரதேசவாரியாக பிரித்தவைகளின் குடிவழியை நிர்ணயிக்க வேண்டும். இவ்வகையில் குடிவழி காணுமிடத்து எது காலத்தால் முந்திய ஏடு என்பது விளங்கும். மேலும் நல்ல ஏட்டையும் இப்போது தேர்வு செய்ய முடியும். இவ்வாறு ஏட்டைத் தேர்ந்த பிறகே நாம் மூலபாட ஆய்வு செய்யத் தொடங்குகிறோம். மூலபாட ஆய்வு செய்யுமிடத்து இருவகை நிலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவை,

1 அகநிலை ஆதாரங்கள்

2 புறநிலை ஆதாரங்கள்

நூல் நடை, சொற்பாங்கு, கருத்தோட்டம் முதலிய நூலுக்குள்ளேயே கிடைக்கும் சான்றுகள் அகநிலை ஆதாரங்கள் எனப்படும்.

நூலாசிரியரது பிற படைப்புகள், சமகால நூல்கள், காலநிலை ஆகியன பற்றிய செய்திகள் புறநிலை ஆதாரங்கள் எனப்படும்.

இவ்விரண்டு ஆதாரங்களையும் கொண்டு முடிவு செய்யப்படும் பாடமே சரியான மூலபாடமாக அமையும். இம்மூலபாட ஆய்வு செய்யுமிடத்து நம் கருத்து, நாம் விரும்பும் அறநினைவு, நமது தற்காலச் சமயம் முதலியவற்றை அறவே மறந்துநின்று ஆய்வு செய்ய வேண்டும். இவ்வாறு ஆய்வு செய்த பிறகு சரியான பாடம் எதுவெனத் தோன்றுகிறதோ அதனை மூலத்தில் கொடுத்துவிட்டு, எஞ்சிய பிற பாடங்களை அடிக்குறிப்பில் சுட்டியே ஆக வேண்டும்.

பதிப்புக் கலையும் பாடபேதமும்:

சிறந்த பதிப்பு நூலானது அனைத்துப் பாடங்களையும் தன்னகத்துக் கொண்டிருக்க வேண்டும். பாடபேதம் இருக்குமிடத்து மூல பாடமாகத் தான் தேர்ந்ததற்கான காரணத்தையும் தெளிவாகச் சுட்ட வேண்டும். முன்னுரைப் பகுதியின்கண் மூலபாட ஆய்வு நிலையில் தான் மேற்கொண்ட பல்வேறு படிநிலைகளையும் விளக்கி எழுத வேண்டும். இவ்வாறு விளக்கும் பகுதி பின்வரும் பதிப்பாசிரியர்களுக்கு உதவியாக அமையும்.

பாடத்தில் தெளிவில்லாதபோது, நூலாசிரியரின் சொற்பிரயோகம் இதுவாகத்தான் இருக்க வேண்டுமென்று படிப்பவர் எண்ணும் வகையில் அமைய மூலநூற் சொல்லடைவு ஒன்றைப் பதிப்பில் தர வேண்டும்.

பாட பேதங்களும் பிழைகளும்:

1 பாடவேறுபாடுகள் பெரும்பாலும் பெயர், பெயரெச்சம், தொகை ஆகியவைகளிலேயே நேர்ந்துள்ளன. புணர்ச்சி இலக்கணம் யாவர்க்கும் எளிமையாகவும் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளத் தக்கதாகவும் இல்லாக் குறையினால் சந்திமிகைப் பிரதிபேதங்களும், சந்திக்குறைப் பிரதிபேதங்களும் நேர்ந்துள்ளன.[4]

மேற்காட்டிய கருத்தைக் கூறும் ஆசிரியர் இலக்கணப் பயிற்சியின்மையால் ஏற்படக் கூடியதைப் பிழைகள் என்று குறிப்பதற்குப் பதிலாகப் பிரதிபேதங்கள் என்று குறிக்கிறார். உதாரணமாகப் 'பல கதைகள்' என்பது சரியான பாடம். இதனை 'பலக் கதைகள்' என எழுதினால் அது பிழையே தவிர பிரதிபேதமாகாது. எனவே பிழைக்கும் பிரதிபேதத்திற்கும் வேறுபாடு உணர்த்த வேண்டியது அவசியமாகும்.

2 ஒருமை பன்மையாகவும், பன்மை ஒருமையாகவும் மாறிப் பல பாட வேறுபாடுகள் நேர்ந்துள்ளமையை நோக்க, ஒருமை பன்மை மயக்கம் பண்டே உண்டெனஅறிய முடிகிறது என்பதும் ஒரு கருத்து.[5]

இத்தகைய மயக்கம் ஏற்பட்டதும் பிழைகள் தானே தவிர பிரதி

பேதமன்று. இப்பிழைக்குக் காரணம் சுவடிகளைப் படியெடுப்பவரின் இலக்கணத் தெளிவின்மையே ஆகும்.

இவ்வாறு பால் மாற்றம், இட மாற்றம், திணை மாற்றம், வினை மாற்றம், சொல் மாற்றம் முதலியவற்றால் நேரும் பிழைகளை யெல்லாம் அவற்றின் தன்மை உணராது பிரதிபேதம் என்றே சுட்டிச் செல்வார். 'பிரதிபேத ஆராய்ச்சி' என்னும் நூலுடையார். இவையனைத்தும் இலக்கணப் பயிற்சி யின்மையால் நேர்ந்த பிழையே தவிர பிரதிபேதமன்று.

எனவே பிழை, பாடபேதம் ஆகிய இரண்டின் தன்மையை உணர்ந்து, வேறுபாடு சுட்டவேண்டியது நம் கடமை.

முடிவுரை:

இதுகாறும் பாடபேத ஆராய்ச்சியின் வரலாறு, பாடபேதம் பற்றிய விளக்கம், அது ஏற்படுவதற்கான காரணம், மூல பாடத்தைக் கண்டறிதல், கண்டறிந்த முறையைப் பதிப்பில் சுட்டுதல், பாட பேதத்திற்கும் பிழைக்குமுள்ள வேறுபாடு முதலியன குறித்து ஓரளவு விளங்கக் கண்டோம். ★ ★ ★

—: பின் குறிப்புகள் :—

1 மு. சண்முகம் பிள்ளை, திருக்குறள் யாப்பமைதியும் பாட வேறுபாடும், ப-ம். 117

2 எசு. வையாபுரிப்பிள்ளை, கம்பன் காவியம், ப-ம். 57

3 ,, ,, ப-ம். 58

4 மு. இராமகிருட்டினன், முன்னுரை, பிரதிபேத ஆராய்ச்சி, ப-ம் 2

5 ,, ,, ப-ம் 4

—: துணை நூல்கள் :—


இராமகிருட்டிணன், மு., பிரதிபேத ஆராய்ச்சி, வேங்கடாசலபுரம், 1961.

சண்முகம்பிள்ளை, மு., திருக்குறள் யாப்பமைதியும் பாட வேறுபாடும், சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை-5, 1971.

வையாபுரிப்பிள்ளை, எசு., கம்பன் காவியம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5, நான்காம் பதிப்பு, 1965.

# பாரதியும் - பாரதிதாசனும்

இராம. சுப்பிரமணியன்,
எம். ஏ; எம். இலைப். சைன்சு; பி. எல்;

தேசியக்கவி பாரதியும், புரட்சிக் கவிஞர் பாரதி தாசனும் இந்நூற்றாண்டு தந்த இணையற்ற கவிஞர்கள். இவ் விரு கவிஞர்களும் தங்கள் கவிதை மலர்களால் தமிழுக்குப் பெரு மையையும் சிறப்பினையும் வழங்கியவர்கள். இன்று தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள ஏற்றத்திலும் சிறப்பிலும் இந்த இரு பெரும் கவிஞர்களுக்கும் பெரும்பங்கு உண்டு. இவ்விருவரும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையுலகில் இரு சுடர் விழிகள்.

இருவருள் பாரதிக்கு மிக்குணர்வு தேசப்பற்று; பாரதிதாசனுக்கு மொழிப்பற்று; பாரதிக்கு ஆத்திகம்; பாரதிதாசனுக்கு நாத்திகம்; பாரதிக்குப் பழமையிலிருந்து புதுமை; பாரதிதாசனுக்குத் தனித்த புதுமை என்று வேற்றுமைப்படுத்தி, இருவரும் சீர் திருத்தமும் மறுமலர்ச்சி யுள்ளமும் மிக்குடையவர். இருவர் நூல் களிலும் கற்பனையும் கலையழகும் கவின்பெற அமைந்துள்ளன.

''பைந்தமிழ்த் தேர்ப்பாகன்'' என்று பாரதியாரைப் பாராட்டி னார்; அவன் நெறிநின்ற பாரதிதாசன். பாரதியாரைப் பாராட் டிய அதே சொல்லைப் பாரதிதாசனுக்கும் பொருத்திக் கூறலாம். பைந்தமிழ்த் தேர்ப்பாகனாகிய பாரதி மறைவிற்குப் பின்னர்த் தமிழுக்குச் சாரதியாக இருந்து அணி செய்தவர் பாவேந்தர் பாரதிதாசன்.

பாரதி வறுமையில் சுதேச இயக்கத்தின் துடிப்பில் துரும்பெனப் புதுச்சேரியிலும் சென்னையிலும் வறுமையில் வாடியவன்; துன் பத்திற்குத் துன்பமாக அவன் வாழ்ந்தான். துன்பம் அனைத் தும் நிறைந்துவிட்ட இன்பமாகக் கருதினார்.

''எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா''

என்று அதனால்தான் பாட முடிந்தது. நெஞ்சின் அடித்தளத்தில் இறைவன் படைப்பில் அனைத்துமே இன்பத்திற்காகவே என்ற நிறைவில் சிரித்துக் கொண்டே வாழ்க்கையோடு போராடினார்.

பாரதிதாசனும் புதுச்சேரியில்தான் பிறந்து வளர்ந்து ஆரவார மிக்க வாழ்க்கையில் நிமிர்ந்து இலக்கியப்பணி புரிந்தார்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்று பெருமித உணர்வில் வாழ்க்கையின் பிரச்சனைகளைத் தூளாக்கி வாழ்க்கை நடத்தியவர். தம் இறுதி நாட்களைச் சென்னையில் கழித்தபோது, செல்வம் எதுவும் சேர்த்து வைக்காமலே கேடு கெட்ட சமுதாயத்தை மேலும் பார்த்துக் கொண்டிருக்க மனமில்லாமலோ என்னவோ ஒரு நாள் கண்களைக் மூடிக்கொண்டார்.

இருவரும் வறுமையில் செம்மை கண்டவர்கள். அவர்களின் இலக்கியப் பணியை வறுமை எதுவும் செய்யவில்லை. பணமும், பட்டமும், பதவியும் விலைகொடுத்து வாங்கநினையாத தன்மான மிக்க கவிஞர்களாக வாழ்ந்து மடிந்தார்கள்.

உலகத்தை இயக்கக் கூடிய சக்தியைப் பாரதி நம்பினார். உலகப் பொருளெல்லாம் அச் சக்தியின் சிறுசிறு துண்டங்களே என்பது பாரதியின் கருத்து. பிறப்புக்குக் காரணமான அன்னையே உலக இயக்கத்தின் கரு என்று பாரதி கருதினார். எனவேதான், அன்னையை — பராசக்தியை — அன்னை வடிவாக இருக்கக் கூடிய இந்த மாபெரும் சக்தியின் இயக்கமே என்று பாரதி கூறுகின்றார். இக் கருத்துக்கள் பாரதியின் தோத்திரப் பாடல்களின் கருவாக அமைந்துள்ளன. சக்தி புகழ் பாடும் பாரதியின் பண்பு இக் கருத்தினையே தழுவி நிற்கின்றது.

இயற்கையென் றுனையுரைப்பார் — சிலர்
இணங்கும்ஐம் பூதங்கள் என்றிசைப்பார்;
செயற்கையின் சக்தியென்பார் — உயிர்த்
தீயென்பார், அறிவென்பார், ஈசனென்பார்

என்று பாரதி, அன்னை சிவசக்தியையே உலகத்தைச் சூழ்ந்து நிற்கும் இயற்கையாகவும், ஐம்பூதமாகவும், செயற்கையாகவும் அனைத்துமாகக் கருதுகின்றார்.

பாரதிதாசன் பாடல்களில் அழகின் கனிவு மிதந்து நிற்பதைப் பல இடங்களில் காண இயலும். 'அழகின் சிரிப்பு' என்று ஒரு பாடல் தொகுப்பே எழுதியிருக்கின்றார்.

முல்லைவிலை என்ன என்றான்
இல்லைஎன்று நான் சிரித்தேன்
பல்லைஇதோ என்று காட்டிப்
பத்துமுத்தம் வைத்து நின்றான்

காதல் பாடல்களில் அழகையே அனைத்துக் காட்டியவர் பாரதிதாசன். நெஞ்சு குமுறி அவர் பாடியிருக்கின்ற மொழியுணர்ச்சிப் பாடல்களிலும் ஒருவித அழகின் கம்பீரத்தைக் காணமுடியும்.

இருபெருங் கவிஞர்களும் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்கள்; எனினும் கால அளவில் இருவருக்கும் சிறிது இடைவெளி இருக்கின்றது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பே பாரதி மறைந்துவிட்டார்; சுதந்திரம் பெற்ற பிறகும் பாரதிதாசன் வாழ்ந்தார்.

இலக்கிய வரலாற்றில் பாரதியின் வருகை ஒரு புது எழுச்சிக்கு — புதுமையான இலக்கியப் படைப்பிற்கு 'வித்திட்டது. அதே புதுமைக் கோலத்தைத்தான் பாரதிதாசனும் புனைந்து கொண்டார். பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இருந்துவந்த மிக நெருக்கமான— அடிப்படையான — ஒற்றுமை இதுதான். பாரதியின் படைப்பு முறை பாவேந்தருக்கும் வழிகாட்டியது

மன்னர்களையும், செல்வர்களையுமே காவியத் தலைவர்களாகப் பாடிக் கொண்டிருந்த நிலையை மாற்றிப் பாரதி தமது எழுதுகோலால் சாதாரண மனிதனைப் பற்றிப் பாடினார். அவனுக்காகவே இலக்கியம் படைக்க முற்பட்டார்.

பாரதிதாசனின் பாடல்கள் அனைத்தும் தமிழகத்தையே சுற்றிப் படர்ந்து காணப்படுகிறது. உலகத்தில் இந்தியாவை வைத்துப் பார்த்தார் பாரதி; இந்தியாவில் தமிழகத்தின் கண்ணோட்டத்தைக் காண முயன்றார் பாரதிதாசன்.

பாரதி—பாரதிதாசன் தேசப்பற்றுப் பாடல்களும் மொழியுணர்ச்சிப் பாடல்களும் தன்னுனர்ச்சிப் பாடல்களே. பாரதி தேசப்பற்றோடு விளங்கினார்; பாரதிதாசன் மொழியுணர்வோடு விளங்கினார். சுதந்திரப் போராட்டக் காலத்தில் வாழ்ந்தவர் பாரதி. அடிமைத் தவைகளில் உறங்கிக் கொண்டிருந்த மக்களைத் தட்டி யெழுப்பத் தமது கவிதைச் சக்தியைப் பாரதி ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். அவருடைய வீறுகொண்ட தேசப்பற்றின் பிரதிபலிப்பை, ஒவ்வொரு சொல்லும் தேக்கி வைத்திருக்கின்றது

என்று தணியும் இந்தச் சுதந்திரத் தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?

என்று தணிய முடியாத சுதந்திரத் தாகத்தைப் பாரதி சுட்டிக் காட்டுகின்றார்.

தேசப் பற்றைவிட மொழியுணர்ச்சியே பாரதிதாசனை ஆட்டிப்

படைத்தது. தேசியப் பற்று பாரதியை அணு அணுவாகச் சீரணித்து நிற்பதுபோல மொழி உணர்வு பாரதிதாசனை முழுவதுமாக விழுங்கி விட்டிருக்கிறது.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

என்று மொழி உணர்ச்சியின் வேகத்தில் இதைப் பாரதிதாசன் பாடினார். பாரதிக்குத் தேச பக்தியின் உந்தல்; பாரதிதாசனுக்கு மொழியுணர்ச்சியின் வேகம். இருவருக்கும் நெஞ்சில் ஊறி நின்ற உணர்வோட்டம் ஒன்றுதான். ஒன்று தேசியப் பற்றாக மலர்ந்தது; மற்றொன்று மொழி உணர்ச்சியாகச் செழித்தது. ஆனால் இருவரையும் பாட வைத்தது ஓர் எழுச்சி தான்; ஆனால் வெளிவந்தவை வெவ்வேறானவை.

அடிமை வாழ்வு வாழ்ந்த மக்களைப் பார்த்துப் பாரதி மனம் வெதும்பினார். வெறும் எலும்பிற்கும் சதைக்கும் வாழ்கின்ற வாழ்வினைவிட எண்ணத்திற்கும் தேசியப் பற்றிற்கும் வாழ்கின்ற வாழ்க்கையே சிறந்தது என்று எண்ணினார்.

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறமு மின்றி
வஞ்சனை சொல்வாரடீ! — கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடீ!

என்று இகழவும்,

சொந்த சுகங்களும் புவிச்சுகங்களும் மாண்புகளும்
அந்தகர்க் குண்டாகுமோ!—கிளியே!
அலிகளுக் கின்ப முண்டோ?

என்று பழிக்கவும்,

மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென்
ஈனர்க் குலந் தனில்—கிளியே! [றெண்ணும்
இருக்க நிலைமை யுண்டோ?

என்று வெதும்பவும் செய்தார். அனைத்திற்கும் மேலாக,

நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்.
அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே

என்று நெஞ்சு பொறுக்க முடியாத தமது அவலத்தைச் சீற்றத்தோடு வெளிப்படுத்துகின்றார்.

பாரதிதாசனுக்கும் இதே வேக உணர்ச்சி இருக்கிறது. தேசியப்பற்று வேண்டும் என்று சீறினார் பாரதி; மொழிப்பற்று இல்லையே என்று பாரதிதாசன் குமுறுகின்றார். அக்குமுறலின் ஆவேசத்தால்தான்,

இன்பம் வந்து நெருங்கிடு நேரத்தில்
ஈனர் அஞ்சிக் கிடக்கின்ற நேரத்தில்
ஒன்றிலாயிரம் தர்க்கம் புரிந்துபின்
உரிமைத் தாய்தன்னைப் போவென்று சொல்வ [தால்
என்னை ஈன்ற நறுந்தாய் நாட்டினை
எண்ணுந்தோறும் உளம் பற்றி வேகுதே!
அன்பிருந்திடில் நாட்டின் சுகத்தில்
ஆயிரம் கதை ஏன் வளர்க்கின்றனர்?

என்று சாடுகின்றார். இவ்வரிகள் நைந்துபோன கவிஞரின் உள்ளத்தை எவ்வளவு அழகுற படம் பிடித்துக் காட்டுகின்றது.

பாரதியின் தேசியப்பற்று விரிந்து சென்ற விளக்கங்களே குயில் பாட்டு, தோத்திரப் பாடல்கள், கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம். மொழியுணர்ச்சி ஊடுருவும் கதிரியக்கங்களைப் பாரதிதாசனின் காப்பியங்களான — பாண்டியன் பரிசில், அழகின் சிரிப்பில், குடும்ப விளக்கில் காணமுடிகின்றது. அவர்களுடைய இலக்கியப் பரப்பு முழுவதுமே ஒரே எண்ண ஓட்டத்தின் சிதறல்கள்தாம் மின்னி மின்னிப் பிரகாசிக்கின்றன.

சமுதாய அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதில் இருவரும் துடிப்பாக இருந்தனர்.

இனியொரு விதிசெய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்.
தனியொருவனுக் குணவிலை யெனில்
சகத்தினை யழித்திடுவோம்

என்று பாரதியும்,

கொலை வாளினை எடடாமிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா!

என்று பாரதிதாசனும் கூறுகின்றனர்.

வந்தே மாதரம்

'இதுவே உயிரின் ஒலி,, 'இதுவே சீவசக்தியின் சாந்தி வதனம்' என்று கூறியே வாழ்ந்து மடிந்தார் தேசியக்கவி பாரதி எனின்,

நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

என்று கூறியே வாழ்ந்து மறைந்தவர் பைந்தமிழ்ப் பாவலர் பாரதி தாசனும்.

பாரதியின் தோத்திரப் பாடல்களில் அமைதியின் கனிவு ஓடுகின்றது. இறைவன் இருக்கின்றான்; தான் அவனுக்கு அடிமை என்ற பணிவடக்கத்தில் அமைதி வடிந்திருக்கிறது. பாரதிதாசனின் அறிவியக்கப் பாடல்களில் கம்பீரத்தின் எழுச்சி நிமிர்ந்து நிற்கின்றது. ஆட்டிப் படைக்கின்ற எந்தச் சக்தியும் நமக்குமேல் கிடையாது: நாமே நம்மை நிச்சயிக்கின்றோம் என்ற தன்னம்பிக்கையில் என்ற தன்னம்பிக்கையில் ஒரு துடிப்பின் வேகம் ததும்பி ஓடுகின்றது.

சாதாரண அஃறிணைப் பொருளை உயர்திணையாக உருவகப் படுத்திப் பாரதியும் பாரதிதாசனும் பாடியிருக்கின்றனர். கவிதையை ஒரு தலைவியாக உருவகப்படுத்தி இருக்கின்றார் பாரதி; தென்றலை ஒரு பெண்ணாகக் கண்டிருக்கின்றார் பாரதிதாசன்.

''வாழ்க மனைவியாம் கவிதைத் தலைவி!
தினமும்இவ் வுலகில் சிதறியே நிகழும்
பலபல பொருளிலாப் பாழ்படு செய்தியை
வாழ்க்கைப் பாலையில் வளர்பல முட்கள்போல்
பேதை யுலகைப் பேதைமைப் படுத்தும்
வெறுங்கதைத் திரளை, வெள்ளறி வுடைய
மாயா சக்தியின் மகளே!''

என கவிதையைத் தலைவியாக உருவகப்படுத்துகிறார் பாரதி.

''தெரியாமல் பின்புறமாய் வந்த பெண்ணாள்
சிலிர்த்திடவே எனைநெருங்கிப் படுத்தாள் போலும்,
சரியாத குழல்சரிய லானாள் போலும்,
தடவினாள் போலும், எனைத் தன்கரத்தால்!

புரியாத இன்பத்தைப் புரிந்தாள் போலும்!
புரியட்டும் என இருந்தேன் எதிரில் ஓர்பெண்
பிரிவுக்கு வருந்தினே னென்றாள் ஓகோ!
பேசுமிவள் மனைவி; மற் றொருத்தி தென்றல்!”

என தென்றலை பெண்ணாகக் காண்கின்றார் பாரதிதாசன்.

**பா**ரதியார் பழஞ்சமூகமரபைத் தூய்மையுறுத்த விரும்புகிறார்; ஆனால் பாரதிதாசன் சமூக அடிப்படையையே முற்றிலும் சீர்படுத்த முயலுகிறார். பாரதியின் அறக்கருத்துக்கள் அனைத்தும் சமய அடிப்படையில் தோன்றியவை; ஆனால் பாரதிதாசன் உலகியல் கண்ணோட்டத்திலேயே வாழ்வைப் பார்க்கிறார். பாரதிதாசன் பாரதியாரிடமிருந்த சமய உணர்ச்சியோ உயர்ந்த அறக் கருத்துக்களோ கொண்டிருக்கவில்லை; அனைத்தும் உலகியற் கொள்கைகளாகவே இருக்கின்றன.

**பு**திய தமிழுக்குப் பாரதியும் பாரதிதாசனும் இருசுடர்
விழிகள். அவர்களின் உடல் அழிந்துவிட்ட
போதிலும் வாழ்ந்து முடிந்துவிட்ட
பெரும் வாழ்க்கையால் அவர்கள்
அழியவில்லை. அவர்களின்
உயிர் வாழ்க்கைத் தொடர்பு
தமிழும் தமிழுணர்வும்
வாழும்வரை செழித்து
ஓங்கக் கூடியது.

**வாழ்க தமிழ்!**



# கீழ்க் கணக்கில்*
# சில -- புதிய
# —: தொழிற்பெயர் வடிவங்கள் :—

முனைவர் **ஆதித்தன்**

## [2]

2 செய்தால் வாய்பாட்டுத்
தொழிற் பெயர்கள்:

தீர்ந்தால் போல் தீரா வரும்

(ஏலாதி, 25: 4)

வெந்தால் போல் தோன்றும் நீள் அத்தம்

(திணைமாலை நூற்றைம்பது, 77: 2)

இவ்விரு பாடலடிகளிலும் வருகின்ற 'தீர்ந்தால்', 'வெந்தால்' என்னும் இரு வடிவங்களும் 'போல்' என்னும் உவமப் பொருண்மையில் வரும் வடிவத்திற்கு முன்பு தொழிற்பெயர்களாகச் செயலாற்றுதலைக் கண்டு கொள்ள முடிகின்றது. ஈண்டும் உவம உருபிற்கு முன்பாக வரும் இவ்வடிவங்களை வினையெச்சமாக கருதுதல் இயலாது பொருள் தொடர்பு நிலையில் இவற்றை வினையாலணையும் பெயர்களாகக் கொள்வதும் இயலாது. தொழிற்பெயர்களாகக் கொள்வதே ஏற்புடைத்து.

**மையீற்றுத் தொழிற்பெயர்கள்:**

அறியாமை (ஏலாதி, 10: 4)

பிறந்தமை (நான்மணிக்கடிகை, 11:2)

எதிர்மறைப் பொருண்மையில் வரும் 'அறியாமை' எனும் மையீற்று வடிவம் ஈண்டு 'அறியாதிருத்தல்' என்னும் பொருண்மையில் தொழிற்பெயர்களாகச் செயலாற்றுகின்றது. ஆனால் உடன்பாட்டுப் பொருண்மையில் வரும் 'பிறந்தமை' எனும் மையீற்று வடிவம் எதிர்மறையில் வரும் மையீற்று வடிவம் போன்று தொழிலது நிகழ்வினை மட்டுமே சுட்டி நின்று தொழிற்பெயராகச் செயலாற்றுகின்றதா என்பது ஆய்வுக் குரியது.

*துணர் 55, மலர் 9, பக்கம் 217-இன் தொடர் கட்டுரை.

தொழிலது நிகழ்வினைக்( doing of the action) குறிக்கும் பெயரே தொழிற்பெயர் எனப்படும். ஆனால் பிறந்தமை என்னும் வடிவம் 'பிறத்தல்' என்னும் தொழிற்பெயர் வடிவம் சுட்டும் பிறத்தலாகிய தொழிலது நிகழ்வினை மட்டும் சுட்டாது தொழில் நிகழ்வில் பண்பினை (தன்மை)யும் சுட்டி நிற்கக் காண்கின்றோம். தொழிற் பெயர்கள் காலங்காட்டுதல் இல்லை. ஆனால் இத் தகைய பெயர்கள் காலங் காட்டுகின்றன. இவை தொழில் நிகழ் வோடு தொழிலின் பண்பினையும் சுட்டுவதால் இத்தகைய பெயர் களை வினைப் பண்புப் பெயர்கள் (verbal qualitatives) என்று கருதுவதே (ஆதித்தன், 1979, பக்; 16-20) ஏற்புடைத்து.

வினையாலணையும் பெயரின் அமைப்பினைக் கொண்ட தொழிற் பெயர்கள் பேச்சு தமிழில் அதிகம் பயின்று வருதலைக் கண்டு கொள்ளமுடியும்.

அவர் <u>வருவதைப்</u> பார்த்தேன்

அவர் <u>வந்ததைப்</u> பார்த்தேன்

காலங்காட்டும் வினையாலணையும் பெயரின் அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயர்கள், மையீற்று வினைப்பண்புப் பெயர் கள் போன்றவற்றின் தோற்றம் மொழியில் காணப்பெறும் பிற் கால வளர்ச்சியாகும்.

———o———

இக்கட்டுரை எழுதும் நிலையில் பல்லாற்றானும் உதவிபுரிந்த பேராசிரியர் முனைவர் மோ. இசரயேல் அவர்களுக்கு நன்றி.

—: துணை நூற் பட்டியல் :—

1. ஆதித்தன், ஏ., (1977) 'வினையாலணையும் பெயரா? தொழிற் பெயரா?', தமிழ்ப்பொழில். துணர் 51, எண். 5 மற். 6, பக். 153-154.

2. ஆதித்தன், ஏ., (1979) 'வினைப் பண்புப் பெயர்', ஆய்வுக் கோவை 11, தொகுதி: 2, பக். 16-20.

3. தொல்காப்பியர் (1963) 'தொல்காப்பியம் — சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, கழக வெளியீடு, சென்னை.

# வீர சைவம்

# ஓர் மேல்நோக்கு

''அறிவன்''

மா. சற்குணம், எம். ஏ;

முன்னுரை:

உலக உயிர்களின் வாழ்வு சிறக்கவும் மனிதன் மனிதனாக வாழ்ந்து பேரின்பநிலை எய்தவும் மெய்யுணர்வாளர்கள் தோன்றிப் பல உயரிய நெறிகளைத் தோற்றுவித்தனர். அந் நெறிகளே பின்னர்ச் சமயநெறிகளாகப் போற்றப்படுவனவாயின. தொன்மையும் நன்னீர்மையும் சான்ற பல சமய நெறிகளுள் ஒன்றே வீர சைவம். மனித சூலம் தழைப்பதற்கெனப் பல உயர்ந்த கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது இச் சமயம். வீர சைவத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் கோட்பாடுகள் ஆகியனவற்றைக் குறித்து மேல்நோக்காகச் (Birds' view) சில செய்திகளை வெளிப்படுத்துவதே இக்கட்டுரை வரைவதன் நோக்கம் ஆகும்.

வீரசைவம்:

''வீரம் நிறைந்த சைவக் கொள்கை'' என்பதையே பேராசிரியர் 'சாக்கேர்' வீரசைவம் என்ற சொல்லுக்குரிய விளக்கமாகக்

---

—: முன் (236) பக்கத் தொடர்ச்சி :—


4 தொல்காப்பியர் (1972) தொல்காப்பியம் — எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை.

5 Caldewell. Robert (1956) A comparative Grammer of the Dravidian or South Indian Family of Languages, Madras.

6 Kamil Zvelebil (1959) ''Participial and Verbal Nouns as Predicates in Early Old Tamil. Tamil Culture'', VIII. pp. 178-185.

கொண்டார். வீரம் என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் பெருமிதம் என்று வழங்கப்பட்டது. பெருமிதம்என்ற சொற்குப் பெருந்தன்மை என விளக்கங் கண்டார் திருமூலர். இப்பெருமிதம் கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நான்கன் அடிப்படையிலும் தோன்றும் என்பது மெய்ப்பாட்டியல் தரும் செய்தி. இந் நான்காலும் தன்னை வீறுடன் விளக்கும் செம்பொருளே சிவம், அதுவே வீரசைவம் எனப் பொருள் விளக்கம் கூறுவர் டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கள்.

சிவப்பெருந்தன்மை—சிவப்பெருமிதம் — சிவவீரம்— வீரசிவம் — வீரசைவம் என இதனைச் சொன்மைப் படுத்திச் சுவைக்கலாம். சிவத்தைப் பரம்பொருளாகக் கொண்டவர்கள் வீரசைவர்கள்; கொள்கை நிலையில் ஆரியக் கருத்துக்களை மறுத்தவர்கள் வீர சைவர். தொன்மைக் காலம் முதலாகவே ஆரியர்கட்கு எதிர்ப்பாகவே இருந்து வருபவர்கள் இவர்கள் மட்டுமே. மறைமலையடிகள் வீர சைவர் பற்றி இக் கருத்துடையவராகவே இருந்தார். இருவகை நெறிகளுள் வீரசைவர்கள் அகத்தீ நெறியைப் பின் பற்றுவோராவர்.

நெறி:

முதற்கண் இருவகை நெறிகளைக் குறித்து நாம் அறிவது அவசியம். அகத்தீ நெறி புலத்தீ நெறி என்பனவே அவை. அகத்தீ நெறி என்பது ஒருவர் தன் உடலில் அமைந்துள்ள தீயை வளர்த்து யோகம் செய்து வலிமையைப் பெறுவது எனலாம். புலத்தீ நெறியாவது தமக்கு அயலாகக் கடவுளை நோக்கி யாக குண்டத்தில் தீயை வளர்த்து, அதில் பலியுணவை வணங்கி, மந்திரம் கூறித தவமியற்றி தாம் விரும்பும் ஆற்றலையோ வரங்களையோ பெற்று வெற்றி பெறும் முறையாகும். இது அகத்தீ நெறிக்கு மாறுபட்டதாகும். அகத்தீ நெறியினால் நம்முள்ளே பதிந்திருக்கும் பேராற்றலை வெளிப்படுத்தி வியத்தகு செயல்களை ஆற்றமுடியும். இந்நெறியின் தவமுறையால் செம்பொருள் சிவன் என நின்று நிகழ்த்திய செயல்கள் பலவுள. அகத்தியரை அகத்தீ மரபினர் என்பர் பின் வந்த திருமூலர், தாயுமானவர் முதலானோரும் இந்த அகத்தீ நெறி பற்றிக் கூறியுள்ளனர்.

அகத்தீ நெறி மூலம் பெறும் சக்தியைக் ''குண்டலினி'' சக்தி என்பர். மூச்சுக காற்றினைச் சுழிமுனையில் நிறுத்தினால் மனம் அசைவற்று நிற்கும். பின் உள்நின்று எழும் ''குண்டலினி''

சக்தியை, ''இலிங்கவழி'' என்று சொல்லப் பெறும் ஆறு ஒளி இடங்களிலும் (சடுத்தலம்) பற்றிச் செல்லுமாறு செய்தால் உடல் முழுவதும் ஒளி மயமாகும். பகைவரை அழிக்கவும் அருள் வழங்கவும் இந்நெறி பயன்படும் எஃபதை ''இலிங்க புராணம்'' என்ற தலைப்பில் திருமூலர் அழகுற மொழிவர்.

தொன்மை

மூதன் முதலில் பகுத்தறிவுடன் மக்கள் நெறியை வகுத்த பெருமை சித்தன் சிவனையே சாரும் என்பர். சித்தன் சிவன் தொடக்க காலத்தே மக்கள் தலைவனாக இருந்த நிலையகன்று சுமார் கி. மு. 5000 ஆண்டுமுதல் கடவுளாகக் கருதப்படும் நிலை வளர்ந்தது என்பர். சித்தன் சிவனே அகவழிபாட்டிற்கு முதன் முதலாக ஒரு குறியையும், தாமரை அமர்நிலை வழிபாட்டையும் (பத்மாசன யோகம்) உருவாக்கினான் என்பர். இக்குறி

''மானிடராக்கை வடிவு சிவலிங்கம்''

என்ற கருத்தினதாக அமையும்.

பின் ஆரியர்கள் வருகையினால் கலப்பு ஏற்பட்டு வருணாசிரம அமைப்புக்கள் தோன்றித் தமிழ் முறைகள் அழியலுற்றன. பின் தமிழ்க் கருத்துக்கள் முதன்முதலில் சமஃச்கிருதத்தில் தான் இருந்தன என்று நினைக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது இக்கருத்தினைச் சூரியநாராயண சாத்திரியார் வெளிப்படுத்தியுள்ளார்.

வருணாசிரமத்தை எதிர்த்த திராவிடர்கள், இலிங்கம் ஒன்றே வழிபாட்டிற்குரியது. மற்ற தெய்வமெல்லாம் வணக்கத்திற்குரிய வீரரே என்றனர். இந்நிலையில் சிவ வழிபாட்டு வளர்ச்சியில் சைவம் வளர்ந்தது.

ஒரு தீவிர வீர சைவ இயக்கம் தோன்றலாயிற்று சுமார் 1000 ஆண்டளவில் புரட்சியுள்ளம் கொண்ட துறவியர் ஐவர் இயக்கத்தை அமைத்தனர். சிததனின் மெய்யுணர்வுக் கருத்துக்களை இலிங்க வழிபாட்டுடன் ஏற்றுக் கொண்ட இயக்கமாக வீரசைவம் வளர்ந்தது.

வளர்ச்சி:

இரேவனர், மருளர், பண்டிதர், சங்குகண்ணர், விசுவர் என்ற இவ்வைவராலும் பல துணைத் திருமடங்களாலும் தோற்றி வளர்க்கப்பட்ட வீர சைவம் இடைக் காலத்தில் சற்று நலிவடைந்தது. இதன் வளர்ச்சியைக் கண்ட பிராமணர்கள் வீரசைவத்தில் பல மூடப் பழக்கங்களையும், புராணங்களையும் அமைத்தனர். இரிக்கு வேதத்தில் பிராமணர்கள் இலிங்க வழிபாட்டை வெறுத்து எழுதியுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

தொய்வு:

இதனால் கி. மு. 70 முதல் கி. பி 120 வரை வீரசைவ இயக்கம் செயலிழந்து ஆங்காங்கு இருந்த நிலையிலேயே தன்னை அமைத்துக் கொண்டது. இந்த இடைப்பட்ட காலமான சுமார் 150 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இச்சமயம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

மறுமலர்ச்சி:

கி. பி. 12, 13 நூற்றாண்டுகளில் மீண்டும் மறுமலச்சி ஏற்பட்டது. இதே காலத்தில் கருநாடக நாட்டில் மகான் பசவர் தோன்றினார். அவருடைய திருவசனங்களும், அவரால் அமைக்கப்பெற்ற ''சிவானுபவ மண்டபம்'' வீரசைவ வளர்ச்சியில் ஒரு புதிய வேகத்தை ஏற்படுத்தின. இவரடியொற்றி வீரசைவத்தில் பலர் பங்கெடுத்துக் கொண்டனர். அல்லம்மாப்பிரபுதேவர், சென்னப் பசவர், அக்கம்மாதேவி, சித்தராமேசுவரர், அருளையா ஆகியோர் குறிப்பிடத் தக்கோர் ஆவர். இவர்களும் பசவரின் சிவானு பவ மண்டபத்தில் கலந்து கொண்டனர். பிராமணர்களில் பலர் திருந்தி வீரசைவர் ஆயினர். இவ்வாறு நாடெங்கிலும் இருந்து சமயப்பற்றுள்ள பெரியோர்களால் இவ்வீரசைவம் சிறப்பாக வளரலாயிற்று.

பிற்காலத்தில் தமிழகத்தில் தோன்றிய திருமடங்கள் பல வீரசைவ சமயத்தை வளர்த்து வந்தன-வளர்த்து வருகின்றன. கும்பகோணம் பெரியமடம், விருத்தாசலம் குமாரதேவர் திருமடம், மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடம், பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடம், திருக்கோவிலூர் ஞானியார் சுவாமிகள் திருமடம் முதலிய இன்னும் பல திருமடங்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றி வருகின்றன. சிறப்பாக மயிலம் திருமடத் தலைவர் சிவத்திரு சிவஞானபாலய சுவாமிகளை ஞானகுருவாகக் கொண்டு வாழ்ந்த பெரும்புலவர் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் / துறைமங்கலம், சிவப்பிரகாச சுவாமிகள் வீரசைவத் தத்துவங்கள் பொதிந்த அரிய பல நூல்களை இயற்றிச் சமயத் தொண்டாற்றியுள்ளார்கள். இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகளும் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவராவார். மேலும் திருப்போரூர் சிதம்பர சுவாமி

களும், பேரூர் சாந்தலிங்க சுவாமிகளும் மற்றுமுள்ள வேறு சிலரும் சாத்திர, சமய நூல்கள் பலவற்றை எழுதியுள்ளனர்.

நீர்மை:

வீரசைவ நெறிகளில் மிக இன்றியமையாதனவாகக் குறிக்கப் பெறுவனவற்றை மட்டும் ஈண்டுச் சுருங்கக் கூறுதும். ஐவகை யொழுக்கம் (பஞ்சாச்சாரம்) எண்வகைக் காப்பு (அசுடாவரணம்) அறுவகையிணைப்பு (சடுத்தலம்) முதலிய துறைகளே விதந் துரைக்கப் படுகின்றன. இந்நெறிகள் சமூகத்தை உள்ளீடாகக் கொண்டு அன்பும் அறிவும் அறமும் பேணி பண்பையும் நற்பணி யையும் வெளிக் கொணரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

## —: ஐவகை யொழுக்கம் :—

1 இலிங்க ஒழுக்கம்:

''இது அண்டத்திலும் உள்ளது பிண்டத்திலும் உள்ளது'' என்ற உயரிய கருத்தை அடிப்படையாகக் கொண்டது. சாதி, குலம், நிறம் முதலிய வேறுபாடுகள் இல்லாமல் வீர சைவர்கள் அனை வரும் ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என வாழ வேண்டிய அன்பு ஒழுக்கத்தைக் குறிப்பது. இவர்கள் வழிபடும் கடவுள் இலிங்கம் மட்டுமே. அனைத்து உயிர்களையும் இணைக்கும் அண்டலிங்கத்தோடு இவ்வான்மா கொள்ளும் அன்புறவே இலிங்க ஒழுக்கமுமாகும். எனவே அதனைச் சமூகவியல் ஒழுக்கம் என ஒரு வகையில் சுட்டலாம்.

2 தன்னிறுத்தல் ஒழுக்கம்:

இஃது ''உண்டாலம்ம இவ்வுலகம்'' என்பதற்குச் சங்கப் புலவன் கூறிய காரணத்தை நமக்கு நினைவு படுத்துவதாக உள்ளது. ''தனக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே'' என்பது போன்ற நிலையில், இது தான் வாழ்ந்து பிறரையும் வாழச் செய்யும் உயர்ந்த குறிக்கோளினைக் கொண்டது. இதைத்தானே இன்றையோர் வாழ். வாழ்விடு'' எனச் சுருங்கச் சொல்கின்றனர்.

3 சிவ ஒழுக்கம்:

ஊருக்கோ நாட்டிற்கோ ஏற்படும் கேடுகளை அகற்றும் பணி களில் வீரசைவரின் முனைப்பான பங்கு பற்றிப் பகர்வதே இது. இன்றைய நிலையில் நாட்டுப்பற்று மற்றும் பொதுவாழ்வில் நாட்டம் ஆகியனவற்றைக் குறித்துப் பேசப் படுவனவற்றை இவ்

வொழுக்கம் வலியுறுத்துகிறது எனலாம். மேலும் பிறிதொரு வருக்குத் தாம் செய்யும் தீமை அவர்தம் அங்கலிங்கத்திற்குச் செய்யும் தீமை எனக் கருதப்படுகிறது. ''அன்பர் பணி செய்யத் தம்மை ஆளாக்கி விட்டுள்ளதாக'' எண்ணச் செய்வதாகும் இது ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டல்லவா?''

**4 தாழ்வு எனும் சைவ ஒழுக்கம்:**

உலக உயிர்கட்குத் தான் ஒரு பணியாளன் என்று ஒவ்வொரு வீரசைவரையும் கருதச் செய்வதாகும் இது. எவரிடத்தும் பணிந்து ஒழுகும் பண்பாட்டினை வளர்க்கச் செய்கிறது இது. வெறும் உடம்பை வணங்குவதாக அன்றி அண்டஇலிங்கத்தினை இப்பிண்டஇலிங்க மூலம் வழிபடுவதாகவும் கொள்ளலாம். அடியாரைப் போற்றும் பிற சமய நெறிகளிலும் இது ஒருவகையில் மேலானதாகிறது.

**5 கூட்டமைப்பு ஒழுக்கம்:**

பொது அறம் வளர்க்கும் தன்மையைச் செழிக்க செய்ய வேண்டும் எனும் தலையாய நோக்கத்தைக் கொண்டது இது. தனி அறத்தினும் பொதுவறமே போற்றப்பட வேண்டும். இவர்கள் கூட்டத்தில் பழகும் வாய்ப்பை எப்போதும் பெற வேண்டும். இதனாலன்றோ ஒருங்கிணைந்த வளர்ச்சி வேகத்தை எல்லாத் துறைகளிலும் எட்டவியலும் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டது இது.

மேற்கண்ட இவ்வைந்து ஒழுக்கங்களும் ''பஞ்சாச்சாரம்'' என வலியுறுத்தப்படுகிறது. இவ்வைந்து வகை ஒழுக்கங்களையும் வீரசைவர் அவசியம் பின்பற்றப்பட வேண்டும்.

## எண்வகைக் காப்பு

ஐவகை ஒழுக்கங்களால் வாழ்வில் வெற்றி பெறும் வீரசைவர் மேலும் எண்வகைத் தற்காப்பு ஒழுக்கங்களால் தம்மை உயர்த்திக் கொள்ளும் பெற்றியினைக் கூறுவதே அட்டாவரணம் (எட்டு கோட்டை) எனப்படும். அவையாவன,

| | |
|---|---|
| 1 குரு | 2 இலிங்கம் |
| 3 சங்கமர் | 4 பாதோதகம் |
| 5 பிரசாதம் | 6 திருநீறு |
| 7 அக்கமணி | 8 திருவைந்தெழுத்து |

எனும் இவ்வெட்டும் வீரசைவர்க்குத் தற்காப்பு கவசங்களாக உள்ளன. இனி அவற்றைக் காண்போம்.

(தொடரும்)